# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

****************

**முறையீட்டு மனு எண்: 172/2018/பே**
**ஆணை நாள் 28 –02–2019**

திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
அன்னவாசல் பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

சென்னை, மைலாப்பூர், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலையினைச் சேர்ந்த திரு.எம்.ஆறுமுக நயினார் என்பவரது 30.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 172/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கை பெறப்பட்டு, முறையே பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சியில் 2013–14ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய் அமைத்தல் பணிகளுக்கான ஒப்பந்த விளம்பரத்தினை தனது நிறுவனம் மூலம் விளம்பரப்படுத்திய வகையில் பட்டியல் எண் 054/2014–15 நாள் 23.06.2014 ன்படி ரூ,28,464/– மேற்படி அன்னவாசல் பேரூராட்சி மூலம் இது வரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 09.08.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ நடவடிக்கையினைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சி செயல் அலுவலர் 18.02.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீட்டு

மனுவில் தெரிவித்துள்ள விளம்பரக் கட்டணத் தொகை ரூ.28,464/– ஐ சம்பந்தப்பட்ட கிரீன்வேஸ் அட்வர்டைசிங் அண்டு பப்ளிசிட்டி, என்ற நிறுவனத்திற்கு அன்னவாசல் பேரூராட்சி காசோலை எண். 997274/நாள்.07.02.2019 படி அனுப்பி வைத்துள்ளார். மேற்படி கடிதம் மற்றும் அனுப்பப்பட்ட காசோலையின் ஒளி நகல்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்டு வரப்பெற்றுள்ளது.

இந்நேர்வில் மேற்படி முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள விளம்பரத் தொகை இம்முறைமன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் செலுத்தப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

5/3/2019

செயலாளர்.

**பெறுநர்**

1.திரு. ஆ. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

2.செயல் அலுவலர்,
அன்னவாசல் பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

**நகல்**

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி செயலர்.
முறைமன்ற நடுவ செயலாளரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள் பிரிவு)